RNI-N0: TNTAM/2021/83936




Postel Regd. No: TN/5/SVA/2023-2025





# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING | www.malaithanthi.in | மாலை நாளிதழ்

சிவகங்கை | மலர்-5 | இதழ்- 157 | ஜூன்.14 2026 ஞாயிற்றுக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5


# “பாஜகவை விமர்சித்தால் ஆட்சிக்கு ஆபத்து வருமென பயமா?”: விஜய்க்கு ஸ்டாலின் கேள்வி

சென்னை: ஜூன்.14-

“கரூர் சி.பி.ஐ. வழக்கில் இருந்து தப்பிக்கத்தான் நீங்கள் டெல்லிக்குச் சென்றீர்களா? பா.ஜ.க.வை உறுதியாக விமர்சித்துப் பேசினால் உங்கள் ஆட்சிக்கு ஆபத்து வந்துவிடும் என்று பயப்படுகிறீர்களா? இந்தக் கேள்வியையெல்லாம் கேட்டு, ஒரு முதல்வராக நீங்கள் அரசுக் கூட்டத்தில் கலந்துகொண்டதை உங்களைப் மாதிரி நான் தரம் தாழ்ந்து விமர்சிக்க விரும்பவில்லை” என்று திமுக தலைவர் ஸ்டாலின் பேசினார்.

சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற திமுக மகளிரணி மற்றும் மகளிர் தொண்டர் அணி ஆலோசனைக் கூட்டத்தில் கலந்துகொண்டு மு.க.ஸ்டாலின் பேசியது:

“இப்போது எதிர்க்கட்சியாக இருக்கிற நாம், மீண்டும் ஆளும் கட்சியாக மாற வேண்டும் என்றால், இன்னும் சுறுசுறுப்பாகவும் வேகமாகவும் செயல்பட வேண்டும். அதற்கான களமாகத்தான் இந்தக் கூட்டம் நடந்து கொண்டிருக்கிறது.

“ஆறு மாதம் கூட விமர்சனம் செய்யாமல் இருக்கும் மாதிரி இந்த ஆட்சி நடக்குமா?” என்று, ஏற்கெனவே நான் கலந்து கொண்ட சில நிகழ்ச்சிகளில் பேசினேன். உடனே, அதை உண்மைக்கு மாறாகத் திரித்து, “ஆட்சியைக் கவிழ்க்க சதியா?” என்று கேட்டு நமது எதிரிகள் அழ ஆரம்பித்து விட்டார்கள்.

நான் ஏற்கெனவே நிறைய முறை சொல்லிவிட்டேன். இன்னொரு முறையும் இந்தக் கூட்டத்தில் நான் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். தி.மு.க பொறுப்பான, விழிப்பான எதிர்க்கட்சியாகத் தன்னுடைய கடமையை உறுதியாகச் செய்யும். இந்த ஆட்சியின் தோல்விகளை நாம் தொடர்ந்து சுட்டிக் காட்டுவோம்; கேள்விகளைப் கேட்போம். அடுத்து எப்போது தேர்தல் நடந்தாலும் மக்களே இந்த ஆட்சியை அகற்றுவார்கள்.

கடந்த ஐந்து ஆண்டுகாலம் நடைபெற்ற நம்முடைய திராவிட மாடல் ஆட்சியே மகளிருக்கான ஆட்சிதான் என்பதைப் பற்றி, இங்கே எனக்கு முன்பு தலைமையேற்றுப் பேசிய கனிமொழி குறிப்பிட்டுச் சொன்னார்கள்.

ஆட்சிக்கு வந்து முதல் கையெழுத்தான விடியல் பயணத்தில் தொடங்கி, கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம், புதுமைப்பெண் திட்டம் என்று ஏராளமான புதுமையான திட்டங்களை நாம்தான் உருவாக்கினோம். அது மக்களுக்குச் சரியாகச் சென்றடைகிறதா என்று பார்த்துப் பார்த்துச் செய்து கொடுத்தோம். அதுமட்டுமல்ல, இப்போது நடந்து முடிந்த தேர்தலில் கூட பெண்களுக்குத்தான் நிறைய வாக்குறுதிகள் நாம் கொடுத்தோம். குறிப்பாக, 8 ஆயிரம் ரூபாய் கூப்பன் கொடுக்கிற இல்லத்தரசி திட்டம், அதுமட்டுமா, உரிமைத்தொகை உயர்வு என்று நிறைய இருக்கின்றன.

ஆனால், இப்போது மக்கள் என்ன நினைக்கிறார்கள் என்று, நீங்களே சோஷியல் மீடியாவில் நிறைய வீடியோக்களைப் பார்த்திருப்பீர்கள். நாள்தோறும் நடைபெறும் குற்றச்சம்பவங்கள், சென்னையையும் பல ஊர்களையும் இருட்டில் மூழ்கடிக்கிற மின்வெட்டு, விவசாயிகளின் பயிர்க்கடன் தள்ளுபடி என்று நடந்த நாடகம் என்று இப்படிப் பலதரப்பட்ட மக்களும், “ஏன்டா இந்த ஆட்சிக்கு வாக்களித்தோம்” என்று கோபமாக, ஆவேசமாக, வருந்திக் கொண்டிருக்கிறார்கள். ஓட்டு போட்டவர்களும் வருத்தப்படுகிறார்கள்; ஓட்டு போடாதவர்களும் வருத்தப்படுகிறார்கள். அதுதான் இப்போது இருக்கும் நிலை.

சாதாரணமாக சொல்கிறார்கள், “ஏதோ இரண்டு ஓட்டு போட்டோம். நீங்கள்தான் ஆட்சிக்கு வருவீர்கள் என்று நினைத்தோம். இப்படி ஆகிவிட்டதே”. இப்போது இந்த ஆட்சியில் குற்றங்கள் பெருகிவிட்டன. நியூஸ் சேனல்களை வைத்தாலே, கொடூரமான குற்றச் சம்பவங்கள்தான் செய்திகளாக வருகின்றன. எனக்கு முன்பு பேசிய கனிமொழி சொன்னார்கள், சமீபத்தில் ஸ்ரீவைகுண்டத்தில் ஆளும் கட்சியைச் சேர்ந்த பெண்ணுக்கு, அந்தக் கட்சியினரே பாலியல் தொல்லை கொடுத்திருக்கிறார்கள். இதுபற்றி இரண்டு அமைச்சர்களிடம் முறையிட்டும் நீதி கிடைக்கவில்லை. நேற்று கூட, ஆலந்தூரிலும், சேலத்திலும் ஆளுங்கட்சியைச் சேர்ந்த நபர்களே பாலியல் குற்றங்களில் ஈடுபட்டதாகச்



செய்திகள் வந்தன.

தேர்தலுக்கு முன்பு இன்றைக்கு இருக்கும் முதல்வர் பேசிய அனைத்துக் கூட்டங்களிலும் பெண்கள் பாதுகாப்பு பற்றித்தான் தொடர்ந்து பேசினார். இன்னொன்றும் சொன்னார். “எங்கு நல்ல விஷயம் நடந்தாலும் அது நம்ம பசங்கதான் செய்ததாக இருக்க வேண்டும்” என்று சொன்னார். ஆனால் இன்றைய நிலை என்ன?. தமிழ்நாட்டில் பெண்களுக்கு எதிரான பெரும்பாலான குற்றச்செயல்களில் த.வெ.க. நிர்வாகிகள் சம்பந்தப்பட்டு இருக்கிறார்கள் என்று செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. பிரச்சாரத்தில் பேசும்போது, “த.வெ.க. ஆட்சி பாதுகாப்பு கொடுக்கும்” என்று சொன்னார்கள். ஆனால், இப்போது த.வெ.க.விடம் இருந்து பாதுகாப்பு வேண்டும் என்று மக்கள் கேட்கிற நிலைக்கு இன்றைக்குத் தமிழ்நாடு இருக்கிறது.

பொதுவாக எல்லோரும் ஷாப்பிங் போனால் என்ன வாங்குவார்கள்? ஆடைகள் வாங்குவார்கள். வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்குவார்கள். ஆனால், இப்போது நம்முடைய முதல்வர் என்ன செய்கிறார் தெரியுமா? அ.தி.மு.க. எம்எல்ஏக்களை ஷாப்பிங் செய்து கொண்டிருக்கிறார். நமக்கு என்ன சந்தேகம் என்றால், அவர் ஆட்சி மீது அவருக்கே நம்பிக்கை இல்லையா அல்லது அவருக்கு ஆதரவு கொடுத்திருக்கிற மற்ற கட்சிகள் மீது நம்பிக்கை இல்லையா? முதலில் அவர் ஆட்சியைக் காப்பாற்றிக் கொள்ள அ.தி.மு.க. எம்எல்ஏக்களை த.வெ.க.வுக்கு ஆதரவாக வாக்களிக்க வைத்தார். இப்போது, அவர்களை ராஜினாமா செய்ய வைத்துவிட்டு, அடுத்த நொடியே தன்னுடைய கட்சியில் இணைத்திருக்கிறார்.

இந்த மாதிரி செய்தியை எல்லாம் பார்க்கும்போது உங்களுக்கு என்ன ஞாபகம் வரும்? பா.ஜ.க. மற்ற மாநிலங்களில் செய்வதையே இங்கு முதல்வர் விஜய் செய்து கொண்டிருக்கிறார். அதாவது, பா.ஜ.க.வின் ஜெராக்ஸ் மாதிரி செயல்படுகிறார். உதவி என்று கேட்டபோது அவருக்கு ஆதரவு கொடுத்த கட்சிகள் எல்லாம், இதைப் பற்றிப் கேட்கும்போது, தர்மசங்கடத்தில் தவிக்கிறார்கள்.

கொஞ்சம் யோசித்துக் பாருங்கள். ஒரு கட்சியில் பல பேருக்கு இடையில் ஒருவருக்குத்தான் வேட்பாளராக வாய்ப்புக் கிடைக்கிறது. எத்தனையோ தொண்டர்கள் உழைக்கிறார்கள், கூட்டணிக் கட்சிகளும் இவர்களது வெற்றிக்காக உழைக்கிறார்கள். இத்தனை பேரின் உழைப்பில் வெற்றி பெற்றுவிட்டு, வாக்குப்பதிவின் போது கைவிரலில் வைத்த மை அழிவதற்குள், ராஜினாமா செய்துவிட்டு இன்னொரு கட்சிக்கு ஆதரவு கொடுக்கிறார்கள். ஜனநாயக சக்திகள் நியாயமாக இதைக் கேள்வி கேட்க வேண்டுமா, வேண்டாமா? ஒரே மாதத்தில் எம்எல்ஏக்கள் ராஜினாமா செய்துவிட்டு த.வெ.க.வில் சேர்கிறார்களே, அந்தளவுக்கு அப்படி என்ன ஆஃபர் த.வெ.க.வில் கிடைத்திருக்கும் என்று பேச வேண்டுமா வேண்டாமா? ஜனநாயகத்தைக் கேலிக்கூத்தாக்குகிற அசிங்கமான ஆட்சியாக இந்த ஆட்சி இருக்கிறது.

முதல்வர்தான் மேடைக்கு மேடை “கான்ஃபிடண்ட்டா இருங்க” என்று சொல்கிறாரே தவிர, அவரே முதலில் கான்ஃபிடண்ட்டாக இருக்கிறாரா! அதனால்தான், தீர்ந்துபோன சக்தி என்று சொன்னவர்களுடைய உறுப்பினர்களையே திருடிக் கொண்டிருக்கிறார். தீர்ந்துபோன சக்தியிடமே திருடுகிற இவர், எவ்வளவு காய்ந்து போன சக்தியாக இருப்பார் என்று பாருங்கள். பாலியல் வன்முறைகள், அரிவாள் வெட்டு, பெட்ரோல் குண்டு வீச்சு என்று நடப்பதையெல்லாம் பார்த்தால், யாராலாவது விமர்சிக்காமல் இருக்க முடியுமா?. வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு டைம் தரலாம்; ஆனால், பொதுமக்களுடைய பாதுகாப்பு பற்றி எப்படிப் பேசாமல் இருக்க முடியும்?

நேற்று முன்தினம், டெல்லியில் பிரதமர் தலைமையில் முதல்வர்கள் எல்லாம் கலந்து கொள்ளும் நிதி ஆயோக் கூட்டம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்திற்கு இங்கிருக்கும் முதல்வரும் போயிருக்கிறார். அங்கு சென்று என்ன பேசினார் என்று உங்களுக்குத் தெரியும். திராவிட மாடல் ஆட்சியில் தமிழ்நாட்டு உரிமைகளுக்காக நாம் வைத்த கோரிக்கைகளில் சிலவற்றையும், நமது ஆட்சியில் செய்த சாதனைகளில் சிலவற்றையும் தன்னுடைய உரையில் முதல்வராக இருக்கும் விஜய் பேசியிருக்கிறார். அதை நாம் வரவேற்கிறோம். அதே சமயத்தில், நான் முதல்வராக இருக்கும்போது, இதே மாதிரி டெல்லி சென்று பேசியபோது, இப்போது முதல்வராக இருக்கிறவர் என்னவெல்லாம் பேசினார் என்று தெரியுமா? அவருக்கு நான் ஞாபகப்படுத்துகிறேன்.

“அமலாக்கத் துறை வழக்கில் இருந்து தப்பிப்பதற்காகப் போனார்கள்”, “பா.ஜ.க. காலில் விழுந்து மறைமுகக் கூட்டணி வைத்திருக்கிறார்கள்”, “அதனால்தான் குரூப் ஃபோட்டோ எடுக்கும்போது முன்வரிசையில் நிற்க ஸ்டாலினுக்கு இடம் கொடுத்தார்கள்”. இதெல்லாம் யார் சொன்னது? அவர் சொன்னது. இப்போது நீங்கள் என்ன செய்துவிட்டு வந்திருக்கிறீர்கள், நான் கேட்கவா? இப்போது நான் கேட்கிறேன், பதில் சொல்லுங்கள். மிஸ்டர் சீஃப் மினிஸ்டர், மாண்புமிகு முதலமைச்சர், கரூர் சி.பி.ஐ. வழக்கில் இருந்து தப்பிக்கத்தான் நீங்கள் டெல்லிக்குச் சென்றீர்களா? பா.ஜ.க.வை உறுதியாக விமர்சித்துப்பேசினால் உங்கள் ஆட்சிக்கு ஆபத்து வந்துவிடும் என்று பயப்படுகிறீர்களா? இந்தக் கேள்வியையெல்லாம் கேட்டு, ஒரு முதல்வராக நீங்கள் அரசுக் கூட்டத்தில் கலந்துகொண்டதை உங்களைப் மாதிரி நான் தரம் தாழ்ந்து விமர்சிக்க விரும்பவில்லை.

மும்மொழிக் கொள்கையை அமல்படுத்த மறுத்த காரணத்திற்காகத் தமிழ்நாட்டிற்கான கல்வி நிதியை ஒன்றிய பா.ஜ.க. அரசு விடுவிக்காமல் பிளாக்மெயில் செய்தார்கள். தி.மு.க. அரசு அதை எதிர்த்துப் போராடினோம். அதில் கூட இப்போது இருக்கும் முதல்வர் என்ன சொன்னார்? பா.ஜ.க. அரசைத் கண்டிக்காமல், “கொடுப்பது அவர்கள் கடமை, வாங்குவது இவர்களது உரிமை. ஆனால் பாசிசமும் பாயாசமும் எல்.கே.ஜி. ரூ யூ.கே.ஜி. பசங்க மாதிரி சண்டை போடுகிறார்கள்” என்று நக்கல் நையாண்டி செய்தீர்களே... இப்போது நீங்கள் மட்டும் என்ன செய்துவிட்டு வந்திருக்கிறீர்கள்? நிபந்தனைகள் இல்லாமல் நிதியைக் கொடுக்க வேண்டும் என்றுதானே நீங்களும் கேட்டிருக்கிறீர்கள்?.

இப்படித்தான் செய்ய முடியும்; ஏனெனில், இது சினிமா இல்லை, ஆட்சி நிர்வாகம். முதலில் அதை புரிந்து கொள்ளுங்கள். மாநில உரிமைகள் சார்ந்த எதுவாக இருந்தாலும் திராவிட மாடல் அரசு போட்டுத் தந்த ப்ளூப்ரிண்ட் படிதான் யாராக இருந்தாலும் செயல்பட முடியும். சொல்லப்போனால், இந்தியாவின் இரண்டாவது பெரிய பொருளாதாரம் தமிழ்நாடு, பெண்கள் அதிகம் தொழிற்சாலைகளில் பணிபுரியும் மாநிலம் தமிழ்நாடு, நமது மாணவர்களுக்கு நீட் விலக்கு என தி.மு.க. அரசின் பாலிசி நோட் மாதிரிதானே முதல்வரின் ஒட்டுமொத்த பேச்சும் இருந்தது? ஈயடித்தான் காப்பியாக இருந்தால் நன்றாக இருக்காது என்று, 2030க்குள் ஒரு ட்ரில்லியன் டாலர் பொருளாதாரம் என்று நான் சொன்னதை மட்டும், 2036 க்குள் ஒன்றரை ட்ரில்லியன் டாலர் என்று, காரில் பட்டி பார்ப்பது போன்று, கொஞ்சமாக மாற்றி பேசிவிட்டு வந்திருக்கிறார். இருந்தாலும் அதற்காக என்னுடைய வாழ்த்துகள். மிஸ்டர் சீஃப் மினிஸ்டருக்கு நன்றி. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி.

இப்போது நான் கேட்ட கேள்விகளையெல்லாம் இங்கு வந்திருக்கிற மகளிரணி உடன்பிறப்புகள் மக்களிடம் கொண்டு போய் சேர்க்க வேண்டும். நம்மை நம்பி ஒரு கோடியே 55 லட்சம் பேர் வாக்களித்திருக்கிறார்கள்; அவர்களுடைய நம்பிக்கையையும் காப்பாற்ற வேண்டும். எனவே, விழிப்புணர்வு ஏற்படுத்தினால் மட்டும் போதாது; லட்சக்கணக்கான இளம் பெண்களைத் தி.மு.க.வை நோக்கி ஈர்த்து வர வேண்டும். அதுமாதிரி நமது செயல்பாடுகள் இருக்க வேண்டும்.

நம்மிடம் வரலாறு இருக்கிறது, கொள்கை இருக்கிறது, சாதனை இருக்கிறது, எதிர்காலத்திற்குத் தேவையான தொலைநோக்குப் பார்வை இருக்கிறது. இது எல்லாவற்றையும் அவர்களுக்குப் புரிகிற மாதிரி சொல்லுங்கள். புரிந்து கொள்ள ஆரம்பித்தால், அவர்கள் நிச்சயம் தி.மு.க.வை நோக்கித்தான் வருவார்கள். அதற்கான பொறுப்பும் கடமையும் மகளிரணியினரான உங்களிடம்தான் இருக்கிறது.

நம்முடைய இயக்கம், அறிவியக்கம் என்பதைக் காட்டுங்கள். எல்லோரையும் நம்முடைய இயக்கத்தை நோக்கி அழைத்து வாருங்கள். கருணாநிதி அடிக்கடி சொல்வார்: “கட்சி என்பது தலை! ஆட்சி என்பது கிரீடம்! தலை இருந்தால் கிரீடத்தை எப்போது வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளலாம். ஆனால் கிரீடத்தை மட்டும் வைத்துக் கொண்டு, தலையைத் தேட முடியாது.”

இப்போது, நாம் தலையைப் பலப்படுத்துகிற பணிகளைத் தொடங்கி இருக்கிறோம். நம்முடைய பலம், நம்முடைய கட்சியின் அமைப்பு முறை. அதனால்தான், “இந்தக் கருணாநிதியின் வாழ்க்கையே முடிந்தாலும் தி.மு.க.வின் வாழ்க்கை முடியாது” என்று அவர் சொன்னார். தி.மு.க.வின் பயணம் தொடர உங்களுடைய உழைப்பைக் கொடுங்கள்” என்றார் மு.க.ஸ்டாலின்.

## நிபா வைரஸ் பாதிப்பு எதிரொலி; 3 நாட்கள் காய்ச்சல், தலைவலி, வாந்தி இருந்தால் மருத்துவரை அணுக வேண்டும்

### பொது சுகாதார துறை வேண்டுகோள்

சென்னை, ஜூன்.14-

நிபா வைரஸ் பாதிப்பு எதிரொலியாக 3 நாட்கள் காய்ச்சல், தலைவலி, வாந்தி இருந்தால் மருத்துவரை அணுக வேண்டும் என்று பொது சுகாதார துறை வேண்டுகோள் விடுத்துள்ளது. கேரள மாநிலம் கோழிக்கோடு மாவட்டத்தில் ஒருவருக்கு நிபா வைரஸ் பாதிப்பு கண்டறியப் பட்டது. அவருக்கு. மருத்துவ குழுவினர் கண்காணிப்பில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இதேபோல. அவருடன் தொடர்புடைய 3 பேர்களும் தனிமைப்படுத் தப்பட்டுள்ளனர். இந்நிலையில், தமிழகத்தில் முன்னெச்சரிக்கை நடவடிக் கைகளை தீவிரப்படுத்த கோரி மாவட்ட சுகாதார துறை அதிகா ரிகளுக்கு பொது சுகாதார துறை அறிவுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக மாவட்ட சுகாதார அலுவலர்களுக்கு, பொது சுகாதார துறை அனுப்பி யுள்ள சுற்றறிக்கையில் கூறியிருப்பதாவது: நிபா வைரஸ், விலங்குகள் மூலம் பரவும் ஒரு நோய் தொற்று. எனவே எவருக்கேனும் தொடர்ச்சியாக 3 நாட்கள் காய்ச்சல், தலைவலி, வாந்தி உள்ளிட்டவை இருந்தால் உடனடியாக டாக்டரை அணுக வேண்டும். அறிகுறிக ளுடன் வருபவ ர்களுக்கு உடனுக்குடன் சிகிச்சை அளிக்க வேண்டும். நிபா வைரஸ் பாதிப்பு இருப்பதாக சந்தேகிக்கப்படும் நபர் களை, மருத்துவனையில் தனி அறையில் வைத்து சிகிச்சை அளிக்க வேண்டும். எல்லையோர மாவட்டங்களில் முன்னெச் சரிக்கை நடவடிக்கைகளை தீவிரப்படுத்த வேண்டும்.

## “அண்ணாமலைக்கு கட்டம் சரியில்லை”: பாஜக மாநிலச் செயலாளர் மீனாட்சி கருத்து

திருச்சி: ஜூன்.14-

பிரதமர் மோடியின் 12 ஆண்டுகால சாதனைகளை விளக்கும் வகையில், திருச்சி மாவட்ட பாஜக அலுவலகத்தில் அக்கட்சியின் மாநிலச் செயலாளர் மீனாட்சி நித்திய சுந்தர் இன்று செய்தியாளர்களிடம் கூறியது: நமக்கு சுதந்திரம் கிடைத்த பிறகு இதுவரை 15 பிரதமர்கள் நாட்டை ஆட்சி செய்துள்ளனர்.

இந்த நிலையில், பிரதமர் மோடியின் 12 ஆண்டு கால ஆட்சி என்பது வரலாற்றுச் சாதனை ஆகும். மோடியின் சாதனைகளைப் பார்த்துதான் மக்கள் தொடர்ந்து தங்களது ஆதரவை வழங்கி வருகிறார்கள். பிரதமர் மோடி முதன்முறை பொறுப்பேற்ற போதே நிர்வாகத்தை முழுமையாகச் சீரமைத்தார். மத்திய அரசின் திட்டங்கள், குறிப்பாக விவசாயிகளுக்குப் மிகப்பெரிய நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளன.

தூய்மை இந்தியா திட்டத்தின் மூலம் நாடு பெரும் அளவிற்கு வளர்ச்சியடைந்துள்ளது. தற்போது நாம் 3வது கட்ட ஆட்சியில் அடியெடுத்து வைத்துள்ளோம். வரும் 2047ம் ஆண்டிற்குள் இந்தியாவை வளர்ந்த நாடாக மாற்றுவதே எங்களது முக்கிய இலக்கு. தொழில் துறை, தனிமனித வளர்ச்சி, கல்வி, விவசாயம் மற்றும் இளைஞர்களின் மேம்பாடு உள்ளிட்ட பல முக்கிய அம்சங்களை உள்ளடக்கிய இலக்குகள் தற்போது தீவிரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அடுத்ததாக, மீண்டும் 4வது முறையும் மக்களின் பேராதரவோடு பாஜக நிச்சயம் ஆட்சி அமைக்கும்.

கடந்த 10 ஆண்டுகளில் தமிழகத்திற்கு முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு அதிக வரிப் பகிர்வு வழங்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் உதவி மானியம் 341.7 சதவீதம் அளவுக்கு உயர்த்தப்பட்டுள்ளது.

தமிழகத்தின் உள்கட்டமைப்பை மேம்படுத்த ரூ.506 கோடி வழங்கப்பட்டுள்ளதுடன், ஆண்டுதோறும் தமிழகத்தின் பொருளாதாரம் உயர நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது. திருச்சியின் வளர்ச்சிக்கு மட்டும் ரூ5,650 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் ரயில்வே துறை, தேசிய நெடுஞ்சாலைகள், உள்கட்டமைப்பு, கல்வி மற்றும் கல்லூரிகளை மேம்படுத்துதல் போன்ற திட்டங்களுக்குப் பெருமளவில் நிதி ஒதுக்கப்பட்டு, மாநிலம் பெரும் வளர்ச்சி கண்டுள்ளது. வந்தே பாரத் ரயில் சேவை, 77 ரயில் நிலையங்கள் புதுப்பித்தல், மெட்ரோ ரயில் திட்டம், சர்வதேச விமான நிலைய மேம்பாடு, கலாச்சாரம் மற்றும் சுற்றுலாத்தலங்களை மேம்படுத்துதல் என நாட்டின் வளர்ச்சிக்குத் தேவையான அனைத்து முக்கியப் பணிகளையும் மத்திய அரசு செய்துள்ளது.

தமிழகத்திற்கு கல்வி நிதி ஒதுக்கீடு செய்வதில் மத்திய அரசு எந்தத் தாமதமும் செய்யவில்லை. ஏதேனும் நிர்வாக ரீதியிலான காரணங்களால் மட்டுமே அது தள்ளிப் போகிறது. நிகழ்காலச் சூழலைக் கருத்தில் கொண்டு, மும்மொழி எதிர்ப்பைத் தாண்டி நாம் சிந்திக்க வேண்டும். தமிழகத்தில் வெறும் மொழி அரசியல் மட்டுமே நடத்தப்படுகிறது. இன்றைய காலகட்டத்தில் நாம் பல மொழிகளைத் தெரிந்து கொள்வது அவசியமானது.

பாஜகவின் வளர்ச்சி என்பது தனிமனிதரைச் சார்ந்தது அல்ல. கட்சி வளர்ச்சியில் சில தடைகள் வரலாம். ஆனால், தன் உயிரையே தியாகம் செய்த தியாகிகளால் உருவான கட்சி இது. அண்ணாமலைக்காக இயக்கத்தில் இருந்து சிலர் வெளியேறி யிருக்கலாம், ஆனால் அது கட்சிக்கு எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்தாது.

நாங்கள் அண்ணாமலையை இழக்கவில்லை. அண்ணாமலை தான் பாஜகவை இழந்துள்ளார். அவருக்குத்தான் தற்போது கட்டம் சரியில்லை. தமிழகத்தில் பாஜக கூட்டணி மிகவும் வலுவாகவும் நிலையாகவும் உள்ளது, வரும் நாட்களில் மேலும் பல புதிய கட்சிகள் பாஜக கூட்டணியில் இணையும். வருங்காலத்தில் மாற்றம் வரும். அது எந்த மாதிரியான மாற்றம் என்பது போகப்போக தான் தெரியும். ஒருவேளை திமுக கூட்டணிக்கு வந்தால் அப்போது பார்க்கலாம்.” இவ்வாறு அவர் கூறினார்



# உதகை அருகே சோலூர் அரசு மேல்நிலை பள்ளியில் குடிமக்கள் நுகர்வோர் மன்ற கூட்டம்

நீலகிரி, ஜூன்.14-

நீலகிரி மாவட்டம் பள்ளி குடிமக்கள் நுகர்வோர் மன்றம், கூடலூர் நுகர்வோர் மனிதவள சுற்றுச்சூழல் பாதுகாப்பு மையம், ஆல் தி சில்ரன் ஆகியன சார்பில் நடைபெற்ற கூட்டத்திற்கு

நிகழ்ச்சிக்கு பள்ளி தலைமை ஆசிரியர் ஷோபனா தலைமை தாங்கினார். கூடலூர் நுகர்வோர் மனிதவள சுற்றுச்சூழல் பாதுகாப்பு மையம் செயலாளர் சிவசுப்பிரமணியம் பேசும்போது மாணவர்களிடம் தற்போது பரவிவரும் நொறுக்கு தீனிகள், பதப்படுத்தப்பட்ட உணவுகள், செயற்கை நிறங்கள் சேர்க்கப்பட்ட உணவுகள் மற்றும் பாக்கெட் தின்பண்டங்களை அதிகம் எடுத்து கொள்வதால் அவற்றில் உள்ள ரசாயனங்கள், குழந்தைகளை உடல் பருமன் (Obesity) இளம் வயதில் சிறுநீரக பாதிப்பு, நினைவு திறன் பாதிப்பு, இதய கோளாறுகள், புற்றுநோய் தாக்குதல் உள்ளிட்ட பாதிப்புகளுக்கு ஆளாகின்றனர். எனவே இவற்றை தவிர்க்க வேண்டும். நொறுக்கு தீனிகளை தவிர்த்து தினசரி உணவில் அதிகப் படியான பருப்பு வகைகள், அனைத்துவகை காய்கறிகள், பழங்களைச் சேர்த்துக் கொள்ள வேண்டும். பொதுஅறிவு வளர்த்துக்கொள்ள தினசரி செய்தித்தாள்கள் வாசித்தல், தலைவர்களின் வாழ்க்கை வரலாறுகள், பொது அறிவு புத்தகங்களை வாசிக்க வேண்டும் என்றார்.

ஆல் தி சில்ரன் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் அஜித் பேசும்போது இன்றைய போட்டி நிறைந்த உலகில் திறமைகளை தகுதியாக கருதப்படுகிறது. தயக்கமின்றி பேசவும், சரியான கருத்துகளை முன்வைக்க வேண்டும். சுறுசுறுப்பாக செயல்படுவார்களை விரைவில் வேலைக்கு சேர்த்து கொள்ளப்படுவார்கள். இல்லாத திறமைகளை வளர்த்துக்கொள்வது அவசியம் என்றார்.

சமூக ஆர்வலர் சிவகுமார், பள்ளி ஆசிரியர்கள் மாணவ மாணவிகள் பலர் கலந்து கொண்டனர்.

# தியாகதுருகம் அருகே மாரியம்மன் கோயில் திருத்தேர் கவிழ்ந்து விபத்து





தியாகதுருகம், ஜூன்.14-

தியாகதுருகம் அருகே அம்மன் கோயில் தேரோட்டம் நடந்தபோது திடீரென தேர் கவிழ்ந்ததால் பரபரப்பு ஏற்பட்டது. கள்ளக்குறிச்சி மாவட்டம் தியாகதுருகம் அடுத்த பல்லக்கச்சேரி கிராமத்தில் உள்ள மாரியம்மன் கோயிலில் நேற்று திருத்தேர் திருவிழா நடைபெற்றது. இதையொட்டி காலை முதல் அம்மனுக்கு சிறப்பு அபிஷேகம் நடைபெற்றது. மாலையில் வடம்பிடித்து தேர் இழுக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு தேரை வடம் பிடித்து இழுத்தனர். சாலையில் தேர் வலம் வந்து கொண்டிருந்தபோது எதிர்பாராத விதமாக மழை மற்றும் சூறைக்காற்று அடித்தது. அப்போது தேரின் சக்கரம் சாலையின் அருகில் உள்ள சிறிய பள்ளம் மீது ஏறி இறங்கியது. இதில் நிலைதடுமாறிய தேர் திடீரென்று கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

அப்போது தேர் கவிழ்ந்த இடத்தில் யாரும் இல்லாததால் அதிர்ஷ்டவசமாக பக்தர்கள் உயிர் தப்பினர். இது குறித்து தகவல் அறிந்து வந்த தியாகதுருகம் தீயணைப்பு நிலைய அலுவலர் (பொறுப்பு) கார்த்திகேயன் தலைமையிலான வீரர்கள் தேரை பத்திரமாக மீட்டனர். பின்பு தேரில் இருந்த மாரியம்மன் சிலையை பத்திரமாக கோயிலுக்குள் கொண்டு சென்றனர். திடீரென்று தேர் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. தேர் கவிழ்ந்ததால் பக்தர்கள் கவலையடைந்தனர்.

## நீலகிரி மாவட்டத்தில், குழந்தை தொழிலாளர் முறை எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு,

# பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் வைக்கப்பட்டிருந்த கையெழுத்து இயக்கத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் கையெழுத்திட்டு விழிப்புணர்வு



நீலகிரி, ஜூன்.14-

நீலகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், தொழிலாளர் நலத்தறை சார்பில், குழந்தை தொழிலாளர் முறை எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு, பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் வைக்கப்பட்டிருந்த கையெழுத்து இயக்கத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு கையெழுத்திட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

அதனை தொடர்ந்து, அனைத்து அரசுத்துறை அலுவலர்களும் விழிப்புணர்வு உறுதி மொழியினை ஏற்றுக் கொண்டனர். குழந்தை தொழிலாளர் (தடுத்தல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம் 1986, 01.09.2016 முதல் குழந்தை மற்றும் வளர் இளம் பருவ தொழிலாளர் (தடுத்தல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம் என திருத்தம் செய்யப்பட்டுள்ளது. இச்சட்டத்தில் 14 வயதிற்குட்பட்ட குழந்தைகளை எவ்வித பணியிலும் ஈடுபடுத்துவதும், 15 முதல் 18 வயதிற்குட்பட்ட வளரிளம் பருவத்தினரை அபாயகரமான தொழில்களில் ஈடுபடுத்துவதும் தடை செய்யப்பட்டுள்ளது. இச்சட்ட விதிகளை மீறுவோருக்கு ரூ.50,000/ வரை அபராதம் (அ) இரண்டாண்டு சிறைதண்டனை அல்லது இவை இரண்டும் சேர்ந்து விதிக்கப்படும். இரண்டாம் முறையாக இச்சட்ட விதிகளை மீறும் பட்சத்தில், சம்மந்த ப்பட்ட குழந்தை தொழிலாளர்களின் பெற்றோர்களுக்கும் ரூ.10,000/வரை அபராதம் விதிக்கப்படும். கல்வி உரிமை சட்டத்தின் கீழ் 14 வயதிற்குட்பட்ட குழந்தைகள் அனைவரும் கட்டாயம் கல்வி கற்க வேண்டும். குழந்தை தொழிலாளர்களை கண்டறியும் பட்சத்தில் 1098 என்ற எண்ணிற்கு தொடர்பு கொண்டு புகார் தெரிவிக்கலாம் என தொழிலாளர் நலத்துறை சார்பாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில், தொழிலாளர் உதவி ஆணையர்கள் குன்னூர் ராஜ்குமார் (அமலாக்கம்), கோத்தகிரி முருகேசன் (தோட்டங்கள்), குன்னூர் ஹேமலதா (தோட்டங்கள்), கூடலூர் லட்சுமி நாராயணன் (தோட்டங்கள்), உதவி மருத்துவர் (தோட்டங்கள்) காமேஸ்வரன், நீலகிரி ஓட்டல் மற்றும் ரெஸ்டாரண்ட் அசோசியேசன் செயலாளர் சலீம்பாஷா, தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு தலைவர் முகமதுபரூக் உட்பட பலர் உடனிருந்தனர்.

# பயிர்க்கடன் தள்ளுபடி கோரி அதிமுக சார்பில் விழுப்புரத்தில் 16ல் ஆர்ப்பாட்டம்: பழனிசாமி அறிவிப்பு

சென்னை, ஜூன்.14-

தவெக தேர்தல் அறிக்கையில் அறிவித்தபடி பயிர்க்கடனை தள்ளுபடி செய்ய வலியுறுத்தி அதிமுக சார்பில் விழுப்புரத்தில் ஜூன் 19ம் தேதி ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது. இதுதொடர்பாக கட்சியின் பொதுச்செயலாளர் பழனிசாமி வெளியிட்ட அறிக்கை: தேர்தல் அறிக்கையில் கூறியபடி, விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளில் வாங்கிய பயிர்க் கடன்களை தள்ளுபடி செய்வது தொடர்பான வாக்குறுதியை நிறைவேற்றவும், தமிழகத்தில் நிலவி வரும் அறிவிக்கப்படாத மின்வெட்டை போர்க்கால அடிப்படையில் சரிசெய்யவும் தவெக அரசை வலியுறுத்தி, விழுப்புரம் மாவட்ட அதிமுக சார்பில் ஜூன் 19ம் தேதி ஆர்ப்பாட்டம் நடைபெறும். இதன்படி புதிய பேருந்து நிலையம் அருகில் உள்ள விழுப்புரம் நகராட்சித் திடலில் நடைபெறும் இந்த ஆர்ப்பாட்டத்துக்கு மாவட்ட செயலாளர் இரா.பசுபதி தலைமை தாங்குகிறார்.

# ஓய்வுபெற்ற மருத்துவர்களுக்கு பணி நீட்டிப்பு கூடாது: தமிழ்நாடு அரசு டாக்டர்கள் சங்கம் வேண்டுகோள்

சென்னை, ஜூன்.14-

ஓய்வுபெற்ற அரசு மருத்துவர்களுக்கு பணி நீட்டிப்பு வழங்கக்கூடாது என்று தமிழ்நாடு அரசு டாக்டர்கள் சங்கத்தின் மாநிலத் தலைவர் மருத்துவர் பி.பாலகிருஷ்ணன் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: திமுக, அதிமுக ஆட்சியில் ஓய்வுபெற்ற அரசு மருத்துவர்களில் தங்களுக்கு சாதகமானவர்களுக்கு பணி நீட்டிப்பை வழங்கினார்கள். இதனால், சீனியர் மருத்துவர்களுக்கு முறையான பதவி உயர்வு கிடைக்காத நிலை ஏற்பட்டது. இதைக் கண்டித்து பல்வேறு போராட்டங்களை நடத்தினோம். ஓய்வு பெற்றவர்கள் உயர் பொறுப்புகளில் வரும்போது முறைகேடுகள் நடைபெற வாய்ப்புள்ளது. அவர்கள் மீது துறைரீதியான நடவடிக்கையும் எடுக்க முடியாது. அதேநேரம், அரசு மருத்துவர்கள் அரசுக்கு கட்டுப்பட்டவர்களாக இருப்பார்கள் என்பதைக் கவனத்தில் கொண்டு, கடந்த ஆட்சியாளர்கள் செய்த தவறை, தவெக அரசு செய்யாது என்று நம்புகிறோம். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.



■ கிருஷ்ணகிரி மாவட்டம் நல்லூர் ஊராட்சியில் அமீகா அறக்கட்டளை நிறுவனம் மற்றும் டைட்டன் கம்பெனி லிமிடெட் நிறுவன சமூகப்பொறுப்பு நிதியின் கீழ் ரூ.12 லட்சம் மதிப்பில் புதியதாக கட்டப்பட்டுள்ள அங்கன்வாடி மையத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் திறந்து வைத்து அங்கன்வாடி குழந்தைகளுக்கு கல்வி உபகரணங்களை வழங்கினார். உடன் துணை ஆட்சியர் (பயிற்சி) சாய் சைதன்யா ஜாதவ், அமீகா அறக்கட்டளை அறங்காவலர்கள் லட்சுமிராமமூர்த்தி,எம். ஆர். தர்மராஜன், டைட்டன் கம்பெனி லிமிடெட் நிறுவனத்தின் சமூகப் பொறுப்பு நிதி மேலாளர் வைரவேல் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

# நகராட்சி வரி வசூல் செய்வதில் முறைகேடு: நகர்மன்ற கூட்டத்தில் கவுன்சிலர்கள் குற்றச்சாட்டு





கிருஷ்ணகிரி, ஜூன்.14-

கிருஷ்ணகிரி நகராட்சியில் வரி வசூல் செய்வதில் முறைகேடு நடப்பதாக நகர்மன்ற கூட்டத்தல் கவுன்சிலர்கள் குற்றம்சாட்டினர்.

கிருஷ்ணகிரி நகராட்சி அலுவலக வளாகத்தில் உள்ள கூட்ட அரங்கில், நகர்மன்ற சாதாரண கூட்டம் நடந்தது. கூட்டத்திற்கு நகர்மன்ற தலைவர் (பொ) சாவித்திரி கடலரசுமூர்த்தி தலைமை வகித்தார். நகராட்சி ஆணையாளர் சேகர் முன்னில வகித்தார்.

இக்கூட்டத்தில், கவுன்சிலர்கள் பேசியதாவது: நகராட்சியில் உள்ள வார்டுகளில் குப்பை கழிவுகள் முறையாக அகற்றப்படுவதில்லை. இது குறித்து தொடர்புடைய அலுவலர்களின் கவனத்திற்கு கொண்டு சென்றும் நடவடிக்கை எடுப்பதில்லை. உள்ளாட்சி தேர்தலுக்கு இன்னும் 6 மாதங்கள் உள்ள நிலையில், நாங்கள் எப்படி எங்களது வார்டு மக்களை சந்திப்போம் என்பதை அலுவலர்கள் புரிந்து கொள்ள வேண்டும். பாதாள சாக்கடை திட்டம் பகுதி 2 தொடங்கப்பட்டு ஒன்றரை ஆண்டுகள் கடந்தும் மெத்தனமாக நடக்கிறது. இப்பணிகள் எடுத்துள்ள ஒப்பந்ததாரருக்கு அபராதம் விதிக்க வேண்டும். ஏற்கனவே, பாதாள சாக்கடை திட்டத்தை பராமரிப்பு பணிகள் மேற்கொள்பவர்களும், சரியாக வேலை செய்வதில்லை.

ஒகேனக்கல் கூட்டுகுடிநீர் திட்டத்தில் பல வார்டுகளுக்கு தண்ணீர் கிடைப்பதில்லை. மழைக்காலங்களில் குடிநீருடன் கழிவுநீரும் கலந்து வருகிறது. ஒகேனக்கல் குடிநீர் சீராக வழங்குவதை உறுதி செய்வதுடன், குழாய்கள் பராமரிப்பு முறையாக மேற்கொள்ள வேண்டும்.

நகரில் சுமார் 97 லட்சம் மக்கள் வசித்து வருகின்றனர். இங்குள்ள மக்களில் 30 சதவீதம் பேர், சிகிச்சைக்காக போலுப்பள்ளியில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு செல்கின்றனர். நான்கு சக்கர வாகனங்களில் செல்லும் போது சுங்ககட்டணம் செலுத்த வேண்டிய அவலநிலை உள்ளது. எனவே, நகராட்சிக்கு மிக அருகில் உள்ள சுங்கச்சாவடியை உடனே அகற்றிட தீர்மானம் நிறைவேற்ற வேண்டும். நகரில் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் போக்குவரத்து நெரிசல் காரணமாக மக்கள் பாதிக்கப்பட்டு வருகின்றனர். போதிய வாகன நிறுத்தம் இடம் இல்லாத கடைகள், மருத்துவனைகளுக்கு எச்சரிக்கை விடுத்து, தங்களிடம் வரும் வாடிக்கையாளர்களுக்கு வாகனங்கள் நிறுத்த வசதி ஏற்படுத்தி தர நகராட்சி மூலம் நடவடிக்கை எடுக்க வேண்டும். நகரின் மைய பகுதியான 5 ரோடு பகுதியில் கழிவறை, நிழற்கூடங்கள் அமைக்க வேண்டும். நகராட்சியில் வரி வசூலில் முறைகேடு நடைபெறுகிறது. வரி குறைத்து மதிப்பீடு செய்ய சிலர் லஞ்சம் கேட்பதாக பொதுமக்கள் புகார் தெரிவித்துள்ளனர். நாய்கள் தொல்லையை கட்டுப்படுத்த வேண்டும். குறிப்பாக நாள்தோறும் வார்டுக்கு 2 பேர் நாய்கடியால் பாதிக்கும் நிலை உள்ளது. என்றனர்.

இதற்கு பதிலளித்து ஆணையர், நகராட்சி தலைவர் ஆகியோர் பேசியதாவது: குப்பைகள் சரியாக சேகரிப்பதை உறுதி செய்யும் வகையில், ஒவ்வொரு வார்டுக்கும் ஒரு பொறுப்பாளர் நியமிக்கப்படும். பாதாள சாக்கடை திட்டம் பகுதி 2 பணிகள் தொடங்கிய நாளில் இருந்து 24 மாதங்களுக்கு முடிக்க ஒப்பந்ததாருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இப்பணியில் தற்போது 60 பேர் ஈடுபட்டுள்ளனர். குறிப்பிட்ட காலத்திற்கு பணிகள் முடிக்கவிட்டால், ஒவ்வொரு நாளுக்கும் ரூ.3 லட்சம் அபராதம் விதிக்கப்படும். நகராட்சியை பொறுத்தவரை ஒகேனக்கல் குடிநீர், தென்பெண்ணை ஆறு குடிநீர் திட்டங்கள் மூலம் தண்ணீர் வழங்கப்படுகிறது. ஒகேனக்கல் குடிநீர் அதிகப்படுத்தி வழங்க கேட்டுள்ளோம். சுங்கச்சாவடி இடமாற்றம் செய்ய தீர்மானம் நிறைவேற்றி அரசுக்கு அனுப்பி வைக்கப்படும். நகரில் ஏ,பி,சி என 3 மண்டலங்களாக பிரிக்கப்பட்டு, அந்தந்த பகுதிக்கு தகுந்தவாறு வரி விதிக்கப்படுகிறது. இது தொடர்பான விவரங்கள் அனைத்து கவுன்சிலர்களுக்கு வழங்கப்படும். நாய்கள் தொல்லை கட்டுப்படுத்த, நீதிமன்றம் சில வழிக்காட்டுதல்களை வழங்கி உள்ளது. நாய்களுக்கு கருத்தடை செய்ய, நவீன முறையில் அறுவை அரங்கு கட்டும் பணிகள் நடைபெற்று வருகிறது. இப்பணியில் இன்னும் 3 மாதங்களில் நிறைவு பெற்றும், நாய்கள் கட்டுக்குள் கொண்டு வரப்படும், என்றனர்.

இக்கூட்டத்தில் திமுக கவுன்சிலர்கள் வேலுமணி, பாலாஜி, ஹேமாவதி பரந்தாமன், சுனில்குமார், மீன் ஜெயக்குமார், செந்தில்குமார், பிர்தோஸ்கான் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



# மாவட்ட அரசு இசைப்பள்ளியில் பகுதிநேர நாட்டுப்புறக் கலைப்பயிற்சி வகுப்புகளில் சேர அழைப்பு

கிருஷ்ணகிரி, ஜூன்.14-

கிருஷ்ணகிரி மாவட்ட அரச இசைப்பள்ளியல் பகுதிநேர நாட்டுப்புறக் கலைப்பயிற்சி வகுப்புகளில் சேர அழைப்பு விடுக்கப்பட்டது.

கிருஷ்ணகிரி மாவட்ட அரசு இசைப்பள்ளியில், அரசு பகுதிநேர நாட்டுப்புறக் கலைப்பயிற்சி வகுப்புகளில் சேர்ந்து பயன்பெறலாம் என, சேலம் மண்டல கலை பண்பாட்டு மைய மண்டல உதவி இயக்குனர் சங்கராமன் தெரிவித்துள்ளார்.

கிருஷ்ணகிரி மாவட்ட அரசு இசைப்பள்ளியை பார்வையிட்ட சேலம் மண்டல கலை பண்பாட்டு மைய மண்டல உதவி இயக்குனர் சங்கரராமன், பின் நிருபர்களிடம் கூறியதாவது: தமிழ்நாடு அரசு கலை பண்பாட்டுத் துறையின் சார்பில், நாட்டுப்புறக் கலைகளைப் பாதுகாக்கவும், இளைய தலைமுறையினரிடையே நாட்டுப்புறக் கலைகளை கொண்டு சேர்க்க, அரசின் அறிவிப்பு திட்டத்தினை செயல்படுத்திடும் பொருட்டும் இசைக்கல்லூரிகள், மண்டலக் கலை பண்பாட்டு மையங்கள், மாவட்ட அரசு இசைப்பள்ளிகள் என 25 இடங்களில், அரசு பகுதிநேர நாட்டுப்புறக் கலைப் பயிற்சி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

அதன்படி, கிருஷ்ணகிரி மாவட்ட அரசு இசைப்பள்ளி வளாகத்தில், அரசு பகுதிநேர நாட்டுப்புறக் கலைப் பயிற்சி மையம் செயல்பட்டு வருகிறது. இதில், சேவையாட்டம், பம்பை, புரவியாட்டம், நாடகம் ஆகிய நாட்டுபுறக் கலைப் பிரிவுகளில் ஓராண்டு பயிற்சியுடன் சான்றிதழ் வழங்கப்படுகிறது. பயிற்சி வகுப்புகள் வெள்ளிக்கிழமை மற்றும் சனிக்கிழமைகளில் மாலை 4 மணி முதல் 6 மணி வரை நடைபெறவுள்ளது. 8ம் வகுப்பு தேர்ச்சி மற்றும் 17 வயதிற்கு மேற்பட்டவர்கள் இப்பயிற்சியில் சேரலாம்.

இக்கலைப் பயிற்சி முடிந்த வுடன், தமிழ் நாடு அரசு இசை மற்றும் நுண்கலை பல்கலைகழகத்தின் வாயிலாக தேர்வு நடத்தி, சான்றிதழ் வழங்கப்படும். தேர்வு எழுத இயலாத மாணவர்களுக்கு பங்கேற்பு சான்றிதழ் வழங்கப்படுகிறது. ஓராண்டு பயிற்சி நிறைவு செய்தவர்களுக்கு பிற்காலத்தில் பள்ளி கல்வித்துறை மூலம் பயிற்சி அளிக்கப்பட்டு, பகுதிநேர கலை ஆசிரியராக பணியில் சேரவும், சுய தொழிலாக கலை நிகழ்ச்சிகளில் பங்கேற்று வருவாய் ஈட்டவும் இயலும். தமிழக அரசின் சார்பில் வழங்கப்படும் கலைஞர்கள் அடையாள அட்டை வாங்குதல் என பல்வேறு விதமான பயன்களை பெற முடியும். நாட்டுப்புறக் கலையில் ஆர்வமிக்க கிருஷ்ணகிரி மாவட்டத்தை சேர்ந்த கல்லூரி மாணவ, மாணவிகள், இளைஞர்கள், பணிக்கு செல்பவர்கள், இல்லத் தரசிகள் என அனைவரும் இவ்வாய்ப்பினை பயன்படுத்திக் கொண்டு நமது மண்ணின் பாரம்பரிய நாட்டுப்புறக் கலை பயிற்சி பெறலாம். இப்பயிற்சி குறித்த விவரங்களையும் தலைமை ஆசிரியர், மாவட்ட அரசு இசைப்பள்ளி, மாவட்ட கலெக்டர் அலுவலகம் எதிரில், பெங்களூரு சாலை, கிருஷ்ணகிரி - 635 115 என்ற முகவரியில் அல்லது 04343 - 234001, 9500388896 என்ற தொலைபேசி எண்ணிலும் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு அவர் கூறினார்.



# மானாமதுரையில் தமிழக வெற்றிக் கழக எம்.எல்.ஏ. இளங்கோவனை சந்தித்த தேவேந்திர மக்கள் முன்னேற்ற சங்க நிர்வாகிகள்

மானாமதுரை, ஜூன். 14-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில், தமிழக வெற்றிக் கழகத்தின் சட்டமன்ற உறுப்பினர் இளங்கோவன் மற்றும் கட்சியின் மாவட்டச் செயலாளரை தேவேந்திர மக்கள் முன்னேற்ற சங்க நிர்வாகிகள் மரியாதை நிமித்தமாக நேரில் சந்தித்தனர்.

தேவேந்திர மக்கள் முன்னேற்ற சங்கத்தின் நிறுவனர் சிவசங்கரி பரமசிவம் தலைமையில் நடைபெற்ற இந்த சந்திப்பில், சங்கத்தின் தலைவர், பொருளாளர், ஒன்றிய மற்றும் நகர நிர்வாகிகள் உள்ளிட்ட முக்கிய பொறுப்பாளர்கள் பங்கேற்றனர்.

இதன்போது, எம்.எல்.ஏ. இளங்கோவன் மற்றும் மாவட்டச் செயலாளருக்கு பொன்னாடை அணிவித்து வாழ்த்துகள் தெரிவிக்கப்பட்டன. மேலும், மானாமதுரை தொகுதி மக்களின் நலன், வளர்ச்சி பணிகள் மற்றும் சமூக முன்னேற்றம் தொடர்பான பல்வேறு கருத்துகள் குறித்து கலந்துரையாடப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் தமிழக வெற்றிக் கழக நிர்வாகிகள் மற்றும் தேவேந்திர மக்கள் முன்னேற்ற சங்க உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# இளையான்குடி குப்பை கிடங்கு பிரச்சனைக்கு உடனே தீர்வு காண்க: பேரூராட்சி சிறப்பு கூட்டத்தில் அதிமுக கவுன்சிலர் எம்.ஏ.நாகூர் மீரா அதிரடி பேச்சு!

இளையான்குடி, ஜூன்.14-

சிவகங்கை மாவட்டம் இளையான்குடி பேரூராட்சி மன்றத்தின் சிறப்பு கூட்டம் நேற்று (12062026, வெள்ளிக்கிழமை) காலை 11.00 மணிக்கு நடைபெற்றது. இக்கூட்டத்தில் 17வது வார்டு கவுன்சிலரும், அஇஅதிமுக பேரூர் கழக செயலாளருமான எம்.ஏ.நாகூர் மீரா, இளையான்குடி மக்களின் அத்தியாவசிய தேவைகள் மற்றும் முக்கிய பிரச்சனைகள் குறித்து தீர்மானம் நிறைவேற்ற வலியுறுத்திப் பேசினார்.




அவரது உரையின் முக்கிய விவரங்கள் பின்வருமாறு:

மாற்று இடம் ஒதுக்கக் கோரி போராட்டம் நடத்த எச்சரிக்கை

இளையான்குடி குப்பை கிடங்கு அமைக்க மாற்று இடம் ஒதுக்கீடு செய்யக் கோரி, பேரூராட்சி தலைவர் மற்றும் மன்ற உறுப்பினர்கள் அனைவரும் இணைந்து வட்டாட்சியர், கோட்டாட்சியர் மற்றும் மாவட்ட ஆட்சியர் ஆகிய அரசு உயர் அதிகாரிகளை நேரில் சந்தித்து எழுத்துப்பூர்வமாக கோரிக்கை வைக்க வேண்டும். ஏற்கனவே பலமுறை அலுவலக ரீதியாக மனு அளிக்கப்பட்டதை நினைவு கூர்ந்த அவர், நமது நியாயமான மக்கள் சார்ந்த கோரிக்கையை அரசு அதிகாரிகள் ஏற்க மறுத்து, இடம் ஒதுக்கீடு செய்யாமல் காலம் தாழ்த்தினால், தலைவர் மற்றும் உறுப்பினர்கள் பொதுமக்களையும் திரட்டி மாவட்ட ஆட்சியர் மற்றும் வருவாய்த்துறைக்கு எதிராக மிகப்பெரிய போராட்டம் நடத்த வேண்டும் என வலியுறுத்தினார்.

உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர வலியுறுத்தல்

மதுரை உயர்நீதி மன்றத்தில் இளையான்குடி குப்பை கிடங்கில் குப்பை கொட்டக் கூடாது என தனிநபர் தொடுத்த வழக்கில், பேரூராட்சி தலைவர் உட்பட அனைத்து உறுப்பினர்களும் தங்களை மனுதாரர்களாக இணைத்துக் கொள்ள வேண்டும். இளையான்குடியில் 22 ஆயிரம் மக்கள் தொகையும், 9500 குடியிருப்புகளும், 1500 வணிகக் கடைகளும் உள்ளன. இதிலிருந்து தினந்தோறும் சேகரிக்கப்படும் 6 டன் குப்பைகளை எங்கே கொண்டு போய் கொட்டுவது? அதற்குரிய இடத்தை எங்களுக்கு ஒதுக்கீடு செய்து தர மாவட்ட ஆட்சியர் மற்றும் வருவாய் துறைக்கு உத்தரவிட வேண்டும் என நீதிமன்றத்தில் மாண்புமிகு நீதிபதியிடம் முறையாக வாதாட வேண்டும் என்றார்.

பேரூராட்சி நிர்வாகத்திற்கு கேள்வி

இளையான்குடி குப்பைக் கிடங்கிற்கு பேரூராட்சி நிர்வாகம் இதுவரை பட்டா வாங்காதது ஏன் என்று கேள்வி எழுப்பிய அவர், உடனடியாக அதற்குரிய பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்றார். மேலும், பொது இடங்களில் குப்பைகளை கொட்டி பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்துவதை பேரூராட்சி நிர்வாகம் உடனடியாகக் கைவிட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

பிற கோரிக்கைகள்:

கூட்டுக் குடிநீர் திட்டம்: அம்ருத் 2.0 வைகை கூட்டுக் குடிநீர் திட்டத்தின் கீழ் கிணறு தோண்டும் பணியை விரைந்து செயல்படுத்த வேண்டும்.

பராமரிப்புப் பணிகள்: குப்பைகள் சேகரிக்கும் பழுதடைந்துள்ள பேட்டரி வாகனங்களை உடனடியாக பழுதுநீக்கி பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும்.

இளையான்குடி மக்களின் நலன் சார்ந்த இக்கோரிக்கைகளை பேரூராட்சி மன்றம் உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என அதிமுக கவுன்சிலர் எம்.ஏ.நாகூர் மீரா கூட்டத்தில் மிக வலுவாக வலியுறுத்திப் பேசினார்.

# கர்நாடக அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி காவிரி நீரை தவெக அரசு பெற்றுத்தர வேண்டும்: அரசியல் கட்சித் தலைவர்கள் வலியுறுத்தல்

சென்னை, ஜூன்.14-

மேட்டூர் அணை திறக்கப்படாததால் விவசாயிகள் கவலை அடைந்திருப்பதாகவும், கர்நாடக அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி காவிரி நீரை தவெக அரசு பெற்றுத்தர வேண்டும் எனவும் தமிழக அரசுக்கு அரசியல் கட்சித் தலைவர்கள் வலியுறுத்தியுள்ளனர். இதுதொடர்பாக அவர்கள் வெளியிட்ட அறிக்கை:

அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி: மேட்டூர் அணை திறக்கப்படாததால் விவசாயிகள் பெரும் அதிர்ச்சிக்கு ஆளாக்கியுள்ளனர்.

இவ்விவகாரத்தில், மேட்டூர் அணையில் இருந்து நீரை திறப்பதற்கான நடவடிக்கைகளையும் அரசு மேற்கொள்ள வேண்டும்.

பாமக நிறுவனர் ராமதாஸ்: மேட்டூர் அணை திறக்கப்படாத தால் டெல்டா மாவட்டங்களில் குறுவை சாகுபடிக்கான நிலத்தயாரிப்பு பணிகள் முடங்கியுள்ளன. எனவே தமிழக அரசு உடனடியாக கர்நாடக அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி காவிரி நீரை பெற்றுத் தர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அமமுக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன்: மின்வெட்டால் நெற்பயிர்களுக்கு உரிய நேரத்தில் போதிய நீரை பாய்ச்ச முடியாமல் பயிர்கள் கருகி வருகின்றன. இந்நிலையில் தவெக அரசு அறிவித்துள்ள 18 மணி நேர தடையில்லா மின்சார வழங்கல் அறிவிப்பை எவ்வாறு நம்புவது?

திமுக விவசாய அணிச் செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயன்:

தமிழகத்தில் ஆண்டு தோறும் ஜூன் 12 மேட்டூர் அணை திறக்கப்படும் நடைமுறையைக் கூட கடைபிடிக்கமுடியாமல் தோற்றுப்போயிருக்கும் இந்தஅனுபவமில்லாத அரசு, வெற்று அறிவிப்பாக வெளியிட்டிருக்கும் குறுவை தொகுப்பு மற்றும் மும்முனை மின்சார அறிவிப்பு என்பது அடுப்பை பற்றவைக்காமலேயே சமைப்பதுபோல் உள்ளது.

தமிழ்நாடு விவசாயிகள் சங்க பொதுச்செயலாளர் பி.எஸ்.மாசிலாமணி: மேட்டூர் அணையை திறக்கப்படாத நிலையில், விவசாயிகளுக்கு தமிழக அரசு குறுவை சிறப்பு திட்ட நிதி ஒதுக்கீட்டை அறிவித்துள்ளது வரவேற்கத்தக்கது.

அதேநேரம் கைநடவு மற்றும் இதர சாகுபடி பணிகளுக்குமான தொகையாக மானியத்தை கூடுதலாக வழங்குவதுடன், காவிரி நீர் கிடைக்காததால் டெல்டா மாவட்டங்களில் குறுவை சாகுபடி மூலம் கிடைக்கும் முழு வருமானத்தை இழந்துள்ள விவசாயிகளுக்கு நிவாரண தொகையையும் அரசு அறிவிக்க வேண்டும். இவ்வாறு அவர்கள் தெரிவித் துள்ளனர்.

மேலும், பாமக தலைவர் அன்புமணி, தமாகா தலைவர் ஜி.கே. வாசன், தவாக தலைவர் தி.வேல்முருகன், ஐஜேகே தலைவர் ரவிபச்சமுத்து ஆகியோரும் காவிரி நீரை பெற்றுத் தர தமிழக அரசை வலியுறுத்தி உள்ளனர்.

# ‘கிரீன் மேஜிக்’ பால் விநியோகம் குறைக்கப்படவில்லை: ஆவின் விளக்கம்

சென்னை, ஜூன்.14-

ஆவின் க்ரீன் மேஜிக் பால் விநியோகம் குறைக்கப்படவோ நிறுத்தப்படவோ இல்லை என்றும், வழக்கம்போல் விநியோகம் செய்யப்படுவதாகவும் ஆவின் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஆவின் நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில், “ஆவின் நிறுவனத்தின் பச்சை நிற பால் வகையான ‘Green Magic’ பாலின் விநியோகம் நிறுத்தப்பட்டதாகவோ அல்லது கணிசமாகக் குறைக்கப்பட்டதாகவோ சில ஊடகங்களில் வெளியாகியுள்ள செய்திகள் உண்மைக்குப் புறம்பானவை.

ஆவின் நிறுவனம் தனது அனைத்து பால் வகைகளையும் Green Magic பால் உட்பட தொடர்ந்து வழக்கம்போல் விநியோகம் செய்து வருகிறது என்பதை இதன் மூலம் தெளிவுபடுத்தப்படுகிறது. எந்தவொரு பால் வகையின் விநியோகமும் நிறுத்தப்படவோ அல்லது கணிசமாகக் குறைக்கப்படவோ இல்லை. நுகர்வோர்களின் தேவைகளுக்கு ஏற்ப பால் தொடர்ந்து விநியோகிக்கப்பட்டு வருகிறது.

எனவே, பொதுமக்களும் நுகர்வோரும் இதுபோன்ற தவறான செய்திகளை நம்பி குழப்பமடைய வேண்டாம் என கேட்டுக்கொள்ளப்படுகிறது. ஆவின் Green Magic பால் வழக்கம்போல எந்தவித தடங்கலும் இன்றி தொடர்ந்து விநியோகம் செய்யப்படும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது” எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

முன்னதாக, ஆவின் பால் உற்பத்தியை முடக்குவது, மக்கள் ஆரோக்கியத்தின் மீது தொடுக்கப்படும் நேரடித் தாக்குதல். அதிக உற்பத்தி செலவின் காரணமாக, பெரும்பாலான நடுத்தர மக்கள் பயன்படுத்தும் ஆவினின் ‘கிரீன் மேஜிக்’ பால் பாக்கெட்டுகளின் உற்பத்தி படிப்படியாகக் குறைக்கப்பட்டுள்ளதாகவும், கூடிய விரைவில் அப்பால் பாக்கெட்டுகள் முழுமையாக நிறுத்தப்பட உள்ளதாகவும் செய்திகள் வெளியாகின. இதற்கு பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களும் கண்டனம் தெரிவித்து வந்தனர். இந்நிலையில், ஆவின் நிர்வாகம் இந்த விளக்கத்தை அளித்துள்ளது.



# சென்னையில் தொடங்கிய மாம்பழ திருவிழா: பல்வேறு மாநிலங்களின் 25க்கும் மேற்பட்ட வகைகள் விற்பனை

சென்னை, ஜூன்.14-

‘இந்தியாவின் மாம்பழ பாரம்பரியத்தைக் கொண்டாடுவோம்’ என்ற தலைப்பில் நாட்டின் பல்வேறு மாநில தோட்டங்களிலிருந்த பறிக்கப்பட்ட சுவை மிகுந்த மாம்பழங்களை சென்னை மக்களுக்கு நேரடியாக வழங்கும் விதமாக, நபார்டு வங்கி மற்றும் அதன் துணை நிறுவனமான நப்கிசான் ஃபைனான்ஸ் சார்பில் ‘மாம்பழ திருவிழா 2026’ சென்னை ராயப்பேட்டையில் உள்ள எக்ஸ்பிரஸ் அவென்யூ வணிக வளாகத்தில் நேற்று தொடங்கியது.

இதில் தமிழகம், ஆந்திரப் பிரதேசம், கேரளா, கர்நாடகா, மத்தியப் பிரதேசம் மற்றும் சத்தீஸ்கர் ஆகிய மாநிலங்களின் பிரசித்தி பெற்ற அல்போன்சா, மல்கோவா, இமாம் பசந்த், பங்கனபள்ளி, செந்தூரா, ருமானி, மல்லிகா, நீலம், ரஸ்வாலி, பெங்களூரா உள்ளிட்ட 25க்கும் மேற்பட்ட மாம்பழ வகைகள் 16 அரங்குகளில் குவிக்கப்பட்டுள்ளன. ஜூன் 14 வரை 3 நாட்களுக்கு காலை 10 மணிமுதல் இரவு 11 மணிவரை கண்காட்சி நடைபெறுகிறது.

மாம்பழ திருவிழாவைத் தொடங்கி வைத்து பார்வையிட்ட வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் ஆர்.வினோத், நிகழ்ச்சியில் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த 8 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு ரூ.2.25 கோடிக்கான கடனுதவிகளை வழங்கினார். பின்னர் அவர் பேசியதாவது: தமிழகத்தில் 1.45 லட்சம் ஹெக்டேர் பரப்பில் மாம்பழம் சாகுபடி செய்யப்பட்டு, 9.49 லட்சம் டன் உற்பத்தி செய்யப்படுகிறது.

இதையொட்டி தேசிய தோட்டக்கலை இயக்கத்தின் கீழ் புதிதாக ‘மா’ நடவு செய்யும் விவசாயிகளுக்கு ஒரு ஹெக்டேருக்கு ரூ.30 ஆயிரம் வரையும், குறைந்த இடைவெளியில் அதிக மாங்கன்றுகளை நடவு செய்யும் விவசாயிகளுக்கு ஒரு ஹெக்டேருக்கு ரூ.48 ஆயிரம் வரையும், பழைய மாந்தோட்டத்தை புதுப்பிக்க ஒரு ஹெக்டேருக்கு ரூ.20 ஆயிரம் வரையும் மானியம் வழங்கப்பட்டு வருகிறது.

தொடர்ந்து ‘மா’ ஏற்றுமதிக்கான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த பல்வேறு துறைகளுடன் இணைந்து கிருஷ்ணகிரி, தருமபுரி, திண்டுக்கல், தேனி, வேலூர், திருவள்ளூர் மற்றும் சேலம் மாவட்டங்களில் ‘மா’ சிறப்புக் குழுக்கள் அமைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

தற்போது 162 டன்னாக உள்ள மாம்பழ ஏற்றுமதியை அடுத்த 5 ஆண்டுகளில் 1000 டன்னாகவும், பதப்படுத்தப்பட்ட ‘மா’ பொருட்களின் ஏற்றுமதியை 75 ஆயிரம் டன்னில் இருந்து 1.46 லட்சம் டன்னாகவும் உயர்த்த திட்டமிட்டுள்ளோம் என்று அவர் பேசினார்.

இந்நிகழ்வில் தோட்டக்கலைத் துறை இயக்குநர் ஜெ.விஜயா ராணி, நபார்டு வங்கியின் பொது மேலாளர் எஸ்.எஸ்.வசீகரன், தலைமைப் பொது மேலாளர் ஹெச்.மனோஜ், இந்திய ரிசர்வ் வங்கியின் பொது மேலாளர் சுப்பிரமணியன், நப்கிசான் மூத்த துணைத் தலைவர் மோகன் கார்த்திக், துணை தலைமை நிதி அதிகாரி ஆர்.கே.சுரேஷ் ராமலிங்கம் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# சிவகங்கை வீணஸ் ஃபவுண்டேஷன்ஸில் தேசிய தையல் இயந்திர தினவிழா கொண்டாட்டம்: அ.பூமிநாநன் தலைமை தையல் ஆசிரியை கவிதா பங்கேற்பு

சிவகங்கை, ஜூன்.14-

சிவகங்கை நகரில் பல வருடங்களாக சிறப்பாக செயல்பட்டு வரும் வீணஸ் தையல் பயிற்சி ஃபவுண்டேஷன்ஸ் நிறுவனமானது தேசிய தையல் இயந்திர தினவிழாவினை சிறப்பாக கொண்டாடினர்.



வீணஸ் ஃபவுண்டேஷன்ஸ் நிர்வாக இயக்குநரான துவங்கால் அ.பூமிநாதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியின் போது தையல் இயந்திரமானது ஒவ்வொரு பெண்களின் குறிப்பாக ஒவ்வொரு குடும்பத்திற்கும் எவ்வளவு பேருதவியாக இருந்து வருகிறது எனவும் பேசினர்...

தொடர்ந்து பல வருடங்களாகவே செயல்பட்டு வரும் இந்த நிறுவனத்தில் அரசு பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியர்க்கு சீருடை மற்றும் வங்கிகளில் வழங்கப்படும் அடமான நகைகள வைக்கும் துணிப்பைகள் மற்றும் தனியார் துணிக்கடைகளுக்கான தேவையான கட்டைப் பைகள் உள்ளிட்ட பொருட்களை தைக்கின்றனர்.

இந்த நிறுவனத்தில் நேரடியாக சுமார் பத்திற்கும் மேற்பட்ட பெண்களும் . மறைமுக சுமார் 95 க்கும் மேற்பட்ட பெண்கள் தங்களின் வசிப்பிடங்களில் ஒப்பந்த அடிப்படையில் துணிகளைத் பெற்றுச் சென்று தைத்து பின்னர் வீணஸ் நிறுவனத்தில் ஒப்படைக்கின்றனர்... இதற்கான பணப் பலன்களை பெற்று வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதுகுறித்து இந்த நிறுவனத்தில் பணிபுரியும் காளையார்கோவில் மறவமங்கலத்தையடுத்த சிரமம் கிராமத்தைச் சேர்ந்த கவிதா என்பவர் கூறுகையில் இந்த தையல் கலை என்பது எல்லோருமே அதுவும் குறிப்பாக பெண்கள் தெரிந்து வைத்திருக்க வேண்டிய முக்கிய கைத்தொழிலாகும்... மேலும் கிராமப்புற பகுதிகளில் பல்வேறு கிராமங்களில் மதுப்பழக்கத்தால் பல பெண்களின் வாழ்க்கை கேள்விக்குறியாக உள்ளது... அப்படிப்பட்ட பெண்களது வாழ்வாதாரத்தை காப்பதே இந்த தையல் இயந்திரம் தான் எனவும் தெரிவித்தார்... மேலும் அவர் பேசுகையில் இந்த வீணஸ் ஃபவுண்டேஷன்ஸ் நிறுவனமானது பல்வேறு ஏழை எளிய பெண்களது வாழ்வாதாரத்தை வழங்கி வருவதாகவும் . வாழ்க்கைச சக்கரம் சுழன்று வருவது என்பது பெண்களின் வாழ்வாதாரத்தை பேணிக் காத்து வருவதாகவும் . பல எண்ணற்ற குடும்பப் பெண்களது வாழ்வில் பின்னணிப் பிணைந்திருப்பது இந்த தையல் இயந்திரம் தான் எனவும் தெரிவித்தார்.

மேலும் இதுகுறித்து நாம் அந்த நிறுவன நிர்வாக இயக்குநரான பூமிநாதனிடம் பேசிய போது இந்த நிறுவனத்தின் சிறப்பம்சமாக பெண்களுக்கு நவீன ரக தையல் இயந்திரங்களை கொண்டு பயிற்சி அளிக்கப்படுகிறது... மேலும் பயிற்சி முடித்த தகுதியானவர்களுக்கு பீஸ் ரேட் அடிப்படையில் துணிகளைத் தைத்து தங்களது உழைப்பிற்கேற்ற ஊதியத்தை பெறுகின்றனர் எனவும் தெரிவித்தார்.

அ.பூமிநாதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியின் போது தையல் கலை ஆசிரியை சிரமம் கவிதா . தையல் தொழிலாளர்களான தனலெட்சுமி . பானு . மீனாள் . வனிதா . சுமதி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்...



■ சேலம் மாவட்டம், ஓமலூர் ஊராட்சி ஒன்றியம், கோட்டை மாரியம்மன் கோவில் ஊராட்சி எஸ்.கே நகரில் சிமெண்ட் கான்கிரீட் சாலையின் தரம் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் க.இளம்பகவத், நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.



## தேனி மாவட்டம் குழந்தைத் தொழிலாளர் முறைக்கு எதிரான விழிப்புணர்வு கையெழுத்து இயக்கத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன் தொடங்கி வைத்தார்

தேனி, ஜூன்.14-

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு தொழிலாளர் நலத்துறை சார்பில் விழிப்புணர்வு கையெழுத்து இயக்கத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா. வைத்திநாதன் கையெழுத்திட்டு துவக்கி வைத்தார். குழந்தைத் தொழிலாளர் முறை முற்றிலுமாக அகற்றப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தும் விதமாக குழந்தைத் தொழிலாளர் எதிர்ப்பு தினம் உலகம் முழுவதும் ஜுன் 12 அன்று கடைபிடிக்கப்பட்டு வருகிறது. மேலும், குழந்தைத் தொழிலாளர்களை பயன்படுத்துவதனால் ஏற்படும் உடல் மற்றும் மனரீதியான பிரச்சனைகள் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வும் ஏற்படுத்தப்பட்டு வருகிறது. அதனடிப்படையில், குழந்தைத் தொழிலாளர் முறைக்கு எதிரான விழிப்புணர்வுப் பணிகளை பொதுமக்களிடம் கொண்டு சேர்க்கும் வகையில் விழிப் புணர்வு கையெழுத்து இயக்க பிரச்சாரத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கையெழுத்திட்டு துவக்கி வைத்தார்கள். அதனைத் தொடர்ந்துஇந்திய அரசியலமைப்பு விதிகளின்படி, கல்வி பெறுவது குழந்தைகளின் அடிப்படை உரிமை என்பதால் 14 வயதுக்குட்பட்ட குழந்தைகளை ஒருபோதும் எந்தவிதப் பணிகளிலும் ஈடுபடு த்தமாட்டேன் எனவும், அவர்கள் பள்ளிக்கு செல்வதை ஊக்குவிப்பேன் எனவும், குழந்தைத் தொழிலாளர் முறையினை முற்றிலுமாக அகற்றிட சமுதாயத்தில் விழிப்புணர்வு ஏற்படுத்துவேன் என்றும், தமிழ்நாட்டை குழந்தைத் தொழிலாளர் அற்ற மாநிலமாக மாற்றுவதற்கு இயன்றவரை பாடுபடுவேன் என்ற குழந்தைத் தொழிலாளர் எதிர்ப்பு உறுதிமொழியினை மாவட்ட ஆட்சியர் அவர்கள் தலைமையில் அரசு அலுவலர்கள், மற்றும் பணியாளர்கள் ஏற்றுக்கொண்டனர்.

இந்நிகழ்வில், மாவட்ட வருவாய் அலுவலர் .ப.ராஜகுமார், தொழிலாளர் நலத்துறை உதவி ஆணையர்.ராமராஜ், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் ஏ.எடிசன் மற்றும் அரசு அலுவலர்கள், பணியாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



■ திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், உலக குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தினத்தினையொட்டி, குழந்தை தொழிலாளர் முறையினை அகற்றுவதற்கான உறுதிமொழியினை மாவட்ட ஆட்சியர் கு.ரவிகுமார், தலைமையில் அனைத்து அரசுத்துறை அலுவலர்களும் ஏற்றுக்கொண்டனர். உடன் மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்) முருகேசன், தொழிலாளர் உதவி ஆணையர் (ச.பா.தி) மு.வரதராஜன், சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் உள்ளனர்.



■ கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் மாநகராட்சி, சந்திரசூடேஸ்வரர் மலைக்கோயில் வளாகத்தில், ரூ.10 இலட்சம் மதிப்பில் மறு சீரமைக்கப்பட்ட டெலஸ்கோப் ஹவுஸ் மற்றும் குழந்தைகள் பூங்காவை மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் திறந்து வைத்தார். உடன் ஓசூர் சார் ஆட்சியர் ஆக்ரிதி சேத்தி, துணை ஆட்சியர் (பயிற்சி) சாய் சைதன்யா ஜாதவ், துணை மேயர் ஆனந்தையா, கிரெடாய் சங்க தலைவர் குருநாதன், செயலாளர் வெங்டாசலம், சமூக ஆர்வலர் லட்சுமணன் உள்ளிட்ட பலர் உள்ளனர்.



■ சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி அருகே உள்ள குப்பைமேட்டில் குவிந்துள்ள குப்பைகள் எரிக்கப்பட்டு வருவதால் அப்பகுதி முழுவதும் கடும் புகைமூட்டம் சூழ்ந்துள்ளது. இதனால் இருசக்கர வாகனங்களில் செல்லும் பயணிகள் மூச்சுத்திணறலால் அவதியடைந்து வருகின்றனர். மேலும், அடர்ந்த புகையால் சாலையில் பார்வைத்திறன் குறைந்து விபத்துகள் ஏற்படும் அபாயம் நிலவுவதாக பொதுமக்கள் கவலை தெரிவித்துள்ளனர். மருத்துவமனைக்கு வரும் நோயாளிகள் மற்றும் பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு குப்பை எரிப்பை தடுத்து, நிரந்தர தீர்வு காண அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை எழுந்துள்ளது.

## வைகை அணையில் தூர்வாரும் பணிகள் மேற்கொள்வது தொடர்பாக எரிசக்தி மற்றும் சட்டத்துறை அமைச்சர் சி.டி.ஆர்.நிர்மல்குமார் அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன் தலைமையில் ஆய்வு



தேனி, ஜூன்.14-

தேனி மாவட்டம், ஆண்டிபட்டி அருகே உள்ள வைகை அணையில் தூர்வாரும் பணிகள் மேற்கொள்வது தொடர்பாக தமிழ்நாடு அமைச்சர் எரிசக்தி மற்றும் சட்டத்துறை அமைச்சர்.சி.டி.ஆர். நிர்மல்குமார் அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், தலைமையில் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.

தமிழ்நாடு அமைச்சர் எரிசக்தி மற்றும் சட்டத்துறை அமைச்சர் வைகை அணையில் ஆய்வு மேற்கொண்டு, அணையின் நீர்த்தேக்கப் பகுதிகளில் படிந்துள்ள வண்டல் மண் மற்றும் சேற்றுப் படிவங்களை அகற்றி, அணையின் நீர்த்தேக்கத் திறனை அதிகரிக்கும் வகையில் தூர்வாரும் பணிகளை விரைவாக மேற்கொள்ள வேண்டும் எனவும், மேலும், தூர்வாரும் பணிகள் தொழில்நுட்ப விதிமுறைகளுக்கு உட்பட்டு தரமாகவும், குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் நிறைவு செய்யப்பட வேண்டும் எனவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

அதனைத் தொடர்ந்து, அணையின் தற்போதைய நீர்மட்டம், நீர்வரத்து, நீர் சேமிப்பு திறன் மற்றும் பராமரிப்புப் பணிகள் குறித்து சம்பந்தப்பட்டத் துறை அலுவலர்களிடம் கேட்டறிந்தார்.

தமிழ்நாடு எரிசக்தி மற்றும் சட்டத்துறை அமைச்சர் அவர்கள் செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்ததாவது,

வைகை அணை கட்டப்பட்டது முதல் தற்பொழுது வரை ஏறத்தாழ 70 வருடங்களும் மேலாக தூர்வாரப்படாமல் உள்ளது. அதனடிப்படையில், வைகை அணையில் தூர்வாரும் மேற்கொள்வது தொடர்பாக நடத்தப்பட்ட ஆய்வுக்கூட்டங்களில் 18 முதல் 20 சதவீதம் வரை மண்படிந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. வைகை அணையில் தூர்வாரும் பணிகள் மேற்கொள்வது தொடர்பாக ஒன்றியஅரசின் ஒப்புதல் பெற, அறிக்கை பெறப்பட்டுள்ளது.

வைகை அணையில் தூர்வாரும் பணிகளை மூன்று கட்டங்களாக மேற்கொள்ள ஏறத்தாழ 9 வருடங்கள் ஆகும் என்பதால் வைகை அணையில் உள்ள மணல்திட்டுகளை அகற்றி தூர்வாரும் பணிகளை துரிதமாக மேற்கொள்ளுவது தொடர்பாக சீரிய திட்டமிடுதலுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும், விவசாயிகள் வைகை அணையிலிருந்து மண் எடுப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தென்தமிழகத்தில் வைகை அணை தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களுக்கு முக்கிய நீர் ஆதாரமாக உள்ளது. வைகை அணையிலிருந்து அனைத்து கால்வாய்க்கும் தண்ணீர் செல்வதற்கும், மழைக்காலங்களில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் திட்டமிடுதல் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அரசின் ஒப்புதல் பெறப்பட்ட பின்னர் உடனடியாக தூர்வாரும் பணிகள் தொடங்கப்படும் என மாண்புமிகு எரிசக்தி மற்றும் சட்டத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

இவ்வாயில், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) .ரஜத்பீடன். மாவட்ட வருவாய் அலுவலர்ப. ராஜகுமார், உதவிசெயற்பொறியாளர் (நீர்வளம்) மல்லிகா, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்.ஏ.எடிசன், வட்டாட்சியர் (பெரியகுளம்). மருதுபாண்டி உள்ளிட்ட அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



■ திருப்பத்தூர் மாவட்டம், மாதனூர் ஒன்றியத்தில், ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் நிதித்திட்டம் (SCPAR) 2025- 26 ன் கீழ், ரூ.5.97 கோடி மதிப்பீட்டில், மாதனூர் ஊராட்சி ஒன்றிய புதிய அலுவலக கட்டடம் கட்டுமான பணிகள் நடைபெற்று வருவதை மாவட்ட ஆட்சியர் கு.ரவிகுமார்,இ.ஆ.ப., (13.06.2026) அன்று நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார். உடன் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் விநாயகம், மகராசி, உதவி பொறியாளர் கார்த்திக், உதவி செயற்பொறியாளர் ஆண்டனி ஆசைத்தம்பி, ஒன்றிய பணி மேற்பார்வையாளர் ஆசைத்தம்பி, உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.




## தேவகோட்டையில் தீவிர வாகன சோதனை: போக்குவரத்து விதிகளை மீறியவர்களுக்கு அபராதம்

தேவகோட்டை, ஜூன்.14-

சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை திருப்பத்தூர் சாலையில் அமைந்துள்ள செனட் மேரிஸ் (St. Mary's) மேல்நிலைப்பள்ளி அருகில் போக்குவரத்து காவல்துறையினர் இன்று தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டனர். போக்குவரத்து சிறப்பு சார்பு ஆய்வாளர் (ஷிஷிமி) மைக்கேல் அஸ்லாம் தலைமையில் இந்த வாகன சோதனை நடைபெற்றது.

சோதனையின் முக்கிய அம்சங்கள்:

அபராதம்: இச்சோதனையின் போது, பதிவு எண் பலகை (Number Plate) இல்லாமல் வந்த வாகனங்களுக்கும், ஓட்டுநர் உரிமம் மற்றும் வாகனப் பதிவு உள்ளிட்ட உரிய ஆவணங்கள் இன்றி இயக்கப்பட்ட வாகனங்களுக்கும் காவல்துறையினர் அபராதம் விதித்தனர்.

விழிப்புணர்வு: அபராதம் விதித்ததோடு மட்டுமின்றி, வாகன ஓட்டிகள் அனைவரும் கட்டாயம் தலைக்கவசம் அணிய வேண்டும் என்றும், சாலைப் போக்குவரத்து விதிமுறைகளை முறையாகப் பின்பற்ற வேண்டும் என்றும் காவல்துறையினர் அறிவுறுத்தினர்.

இந்த வாகன சோதனையில், சிறப்பு சார்பு ஆய்வாளருடன் காவலர்கள் கௌதம், யோக ராஜா மற்றும் ராஜேந்திரன் ஆகியோர் உடனிருந்தனர். காவல்துறையினரின் இந்த திடீர் சோதனையால் அப்பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு காணப்பட்டது.



தேனி மாவட்டம், கோம்பை பேரூராட்சிக்கு குடிநீர் விநியோகம் செய்யும் கோம்பை, பண்ணைபுரம், தேவாரம் பேரூராட்சிகளின் கூட்டுக்குடிநீர் திட்டத்தின் மெயின் பராமரிப்புப் பணிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் மேற்கொள்ளப்பட்டதால் 20.05.2026 முதல் அறிவிக்கப்பட்டு 10 நாட்கள் குடிநீர் விநியோகம் நிறுத்தப்பட்டது. பராமரிப்புப்பணிகள் மேற்கொள்ளப்பட்ட பின்பு, கூடலூர் காவல்நிலையம், கம்பம் அப்பாச்சி பண்ணை, யுவராஜா தியேட்டர் முன்பு ஆகிய இடங்களில் அடுத்தடுத்து ஏற்பட்ட குடிநீர்குழாய் உடைப்புகள் உடனடியாக சரிசெய்யப்பட்டு, கடந்த 10.06.2026 முதல் கோம்பை பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் காலதாமதமின்றி சீரான முறையில் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது என்ற விபரம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.




## பழனி அருகே தவெக சார்பில் தகவல் பலகை வைத்ததற்கு பட்டாசு வெடித்து இனிப்புகள் வழங்கி கொண்டாடி மகிழ்ந்தனர்

திண்டுக்கல், ஜூன்.14-

திண்டுக்கல் மாவட்டம் பழனி அடுத்த நரிக்கல்பட்டி வாரச்சந்தை மிகவும் புகழ்பெற்று விளங்கி வருகின்றன..

தொடர்ந்து தமிழகத்தில் அனைத்து பகுதிகளில் இருந்தும் ஆடு மாடு கோழி போன்றவைகளை கொண்டு வந்து விற்பனை செய்து வருகின்றனர்.

இந்நிலையில் இச்சந்தையில் கடந்த 50 வருடங்களாக குத்தகைதாரர்கள் கோழிக்கு பத்து ரூபாய்க்கு ரசீது கொடுத்துவிட்டு 50 ரூபாய் வசூல் செய்து வருவதும் ஆடு ஒன்றிற்கு 20 ரூபாய் கட்டண சீட்டு கொடுத்துவிட்டு 80 ரூபாய் வசூல் செய்வது நான்கு சக்கர வாகனங்களுக்கு 30 ரூபாய் ரசீது கொடுத்துவிட்டு 100 ரூபாய் வசூல் செய்து வருவது தொடர் கதையாகி வந்தன..

இந்நிலையில் தற்போது தமிழக வெற்றி கழகத்தின் தொப்பம்பட்டி மத்திய ஒன்றிய செயலாளர் தொட ர்ந்து நேர்மையான முறை யில் வியாபாரிகளுக்கு கட்டண சீட்டு கொடுத்து உரிய தொகையை வசூலிக்க வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் தொப்பம்பட்டி வட்டார வளர்ச்சி அலுவலர் சந்தித்து புகார் தெரிவித்தனர். மேலும் 50 ஆண்டுகால நிலையில் தற்போது நரிக்க ல்பட்டி சந்தை முகப்பு வாயிலில் கட்டணங்கள் பற்றிய தகவல் பலகை வைத்தனர் மேலும் பேருந்து நிலையம் அருகே முறையான கட்டணங்கள் அடங்கிய தகவல் பலகையை வியாபாரிகளுக்கு தெரிவிக்கும் வகையில் வைத்துள்ளனர்..

தொடர்ந்து தமிழக வெற்றிக் கழக ஆட்சியில் ஊழல்கள் நடக்காமல் இருப்பதற்கும் நேர்மையான முறையில் கட்டண வரி வசூல் செய்வதற்கும் வியாபாரிகளை ஏமாற்றும் நோக்கினை போக்கிடும் வகையில் கட்சி தொண்டர்கள் பொதுமக்கள் சமூக ஆர்வலர் என அனைவரும் ஒன்று சேர்ந்து வட்டார வளர்ச்சி அலுவலர் மூலம் தகவல் பலகை வைத்துள்ளனர். தொடர்ந்து இதனை வரவேற்கும் விதமாக தமிழக வெற்றிக் கழக மத்திய ஒன்றிய செய லாளர் முகமது அலி ஜின்னா மற்றும் கட்சி நிர்வாகிகள் மற்றும் சமூக ஆர்வலர்கள் சந்தையின் முகப்பு வாயிலில் பட்டாசுகள் வெடித்தும் கேக்குகள் வெட்டியும் பொதுமக்களுக்கும் சமூக அலுவலர்களுக்கும் இனிப்புகள் வழங்கியும் கொண்டாடி மகிழ்ந்தனர்.



திருப்பத்தூர் மாவட்டம், ஆம்பூர் நகராட்சிக்குட்பட்ட கட்டமேடு பகுதியில், கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ், ரூ.7.85 கோடி மதிப்பீட்டில், ஆம்பூர் புதிய பேருந்து நிலையம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருவதை மாவட்ட ஆட்சியர் கு.ரவிகுமார்,இ.ஆ.ப., (13.06.2026) அன்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் ஆம்பூர் நகராட்சி ஆணையாளர் முத்துசாமி, நகராட்சி பொறியாளர் சந்திரன், இளநிலை பொறியாளர் சண்முகம், சுகாதார அலுவலர் அருள் தாஸ் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161